Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.584/2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-1<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 28.08.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் சுக்காம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 19.07.2021ம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் சென்னையில் இருந்தபோது ராஜ்குமார் என்பவர் எனக்கு போன் செய்து எனது மகன் மற்றும் பிரதீபா என்பவரும் TN 48 AY 8950 என்ற Splender plus என்ற இருசக்கர வாகனத்தில் பிரதீபா என்பவர் vka கம்பெனியில் சம்பளம் வாங்கிவிட்டு திரும்ப வீட்டிற்கு

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

வருவதற்காக புளியூர் – உப்பிடமங்கலம் ரோட்டில் உப்பிடமங்கலம் மேம்பாலத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அவர்களுக்கு பின்னால் வந்த அரசு பேருந்து இடது ஓரமாக திரும்பும்போது எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியது எனறும் மேற்படி வாகனத்தில் வலது பக்க வயிறு மற்றும் வலது கையில் காயம் ஏற்பட்டு பேருந்தின் முன் சக்கரத்தில் மாட்டிக்கொண்டார் எனவும் பிரதீபாவிற்கு வலது கண்ணில் மேல் பகுதியிலும் வலது பக்க தோள்பட்டையில் காயம்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக எனது மகனை கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரதீபாவை கரூர் அமராவதி மருத்துவமனைக்கு அனுப்பி இருப்பதாக தகவல் கூறியுள்ளார். மறுநாள் மேற்படி மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது எனது மகன் இறந்துவிட்டதால் அவரது பிரேதத்தை பார்த்துவிட்டு காலை 08.00 மணியளவில் வெள்ளியணை காவல் நிலையத்தில் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள் கையொப்பம் என்னுடையதுதான் . புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பாக இருந்தபோது அங்கு வந்த போலீசார் என் மகன் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள் நான் உடன் இருந்தேன்.

இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சாட்சிகளான ராஜ்குமார் மற்றும் வடிவேல், தங்கராஜ் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சாட்சி ஜெயந்தி என்னுடைய மனைவி என்றால் சரிதான். எனக்கு சுமார் இரவு 07.30 மணியளவில் விபத்து குறித்து தகவல் கிடைத்தது. நான் கரூர் அரசு மருத்துவமனைக்கு இரவு 01.00

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

மணியளவில் வந்தேன். அங்கு போலீசார்கள் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுப்பதற்கு நான் ராஜ்குமார் தங்கராஜ் மற்றும் வடிவேல் மற்றும் 10 – 15 ஊர்காரர்களுடன் மறுநாள் காலை 08.00 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். புகாரை என்னுடன் வந்தவர்கள் எழுதினார்கள். அந்த புகாரில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். புகாரில் எழுதியுள்ள வண்டி எண் மற்றும் ஓட்டுனரின் பெயர் முகவரியை போலீசார் சொன்னார்களா என்றால் சரிதான் ஊர்காரர்களும் சொன்னார்கள். நான் காவல் நிலையம் செல்லும்போது விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்து மற்றும் அதன் ஓட்டுநர் இருந்தாரா என்றால் இருந்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அதன் பின்னிட்டு விசாரணை செய்யவில்லை. விபத்து குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோனது எனது மகன் என்பதால் அவருக்கு இழப்பீடு பெறவேண்டி பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.584/2024

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-2<br>Defence<br>Court |
| Name | : | பிரதீபா |
| Father's Name | : | பிச்சைமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 28.08.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சுக்காம்பட்டியில் குடியிருந்து தற்போது ரெயின்போ மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2021 ம் தேதி இரவு 07.30 மணியளவில் அபிமணியும் நானும் TN 48 AY 8950 என்ற Hero honda Splender Plus இருசக்கர வாகனத்தில் VKA Polimers Company யில் நிறுவனத்தில் சம்பளம் வாங்கி விட்டு இருந்து வீட்டிற்கு செல்வதற்காக

ஓம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

புளியூர் – உப்பிடமங்கலம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் வந்த TN 38 N 3258 என்ற அரசு பேருந்து அதிவேகமாக வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியதில் நானும் அபிமணியும் கீழே விழுந்து விட்டோம். அபிமணிக்கு வயிறு மற்றும் வலது கையில் பலத்த காயம் எனக்கு வலது பக்க நெற்றி மற்றும் வாயில் ரத்தகாயம் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்தவர்கள் உதவிட ஆம்புலன்ஸ் மூலமாக என்னை கரூர் அமராவதி மருத்துவமனைக்கும் அபிமணியை கருர் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனைக்கும் அனுப்பி விட்டார்கள். அபிமணி இறந்ததாக தகவல் கேள்விப்பட்டேன். நான் இரண்டு நாள்கள் அமராவதி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். ஆஜர் எதிரி தான் அரசு பேருந்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது பிறந்த தேதி 19.05.2005 ஆகும். நானும் இறந்துபோன அபிமணியும் நண்பர்கள் ஆவோம். நாங்கள் சென்ற புளியூர் ரோடு போக்குவரத்து அதிகமான பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு முன்பு வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த உடனே கும்பல் கூடிவிட்டது. விபத்து நடந்தது பின்னிட்டு 20–30 நிமிடம் ஆகும். அப்பொழுது போலீசார் வந்தார்களா என்றால் ஞாபகமில்லை. என்னை அருகில் இருந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எங்களை மோதியதாக சொல்லப்படும் அரசு பேருந்தில் பயணிகள் இருந்தார்கள். எங்கள் பின்னாடி வந்த அரசு பேருந்து ஆரன் அடித்த படி வந்தது என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து கொண்டுதான் எனக்கு பின்னால் வந்த பேருந்து எவ்வாறு வந்ததது என்று

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வேகமாக வந்தது. என்னை மருத்துவமனையில் வைத்து போலீசார்கள் விசாரித்தார்களா என்றால் இல்லை. என்னை விசாரித்த போலீசார் சீருடையில் இருந்தார்கள். இரண்டு போலீசார்கள் வந்தார்கள். சம்பவம் நடந்தபோது நான் 12 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு அப்போது வயது 17 ஆகும். சாட்சிகளான ராஜ்குமார் மற்றும் வடிவேல் உள்ளூர்காரர்கள் ஆவார்கள். விபத்தை அபிமணி பேருந்து வருவதை கவனிக்காமல் திரும்பி அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன அபிமணி என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற வேண்டி அவரது குடும்பத்தார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.584/2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-3<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | வடிவேல் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 28.08.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

**நான் சுக்காம்பட்டியில்** குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 குமார் என்னுடைய அண்ணன் ஆவார். விபத்தில் இறந்துபோன அபிமணி என்னுடைய அண்ணன் மகன் ஆவரர். கடந்த 19.07.2021 ம் தேதியில் இரவு 07.30 மணியளவில் கரூரில் வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பும்போது நானும் எனது தம்பி ராஜ்குமாரும் இருசக்கர வாகனத்தில் புளியூர் –

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

உப்பிடமங்கலம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி புளியூர் பாலம் அருகில் சென்றுகொண்டிருந்த போது TN 38 N 3289 என்ற அரசு பேருந்து வேகமாக எங்களை முந்திக்கொண்டு சென்று பேருந்துக்கு பின்னால் சென்று கொண்டிருந்த TN 48 AY 8950 என்ற Honda Splender plus இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதில் நாங்கள் சென்று பார்த்தபோது தான் மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் என்னுடைய அண்ணன் மகன் அபிமணி என்றும், எங்கள் ஊரைச்சேர்ந்த பிரதீபா என்றும் தெரிந்து கொண்டோம். அபிமணிக்கு வயிற்றில் காயம் வலது கையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பிரதீபாவிற்கு வலது கண்ணிற்கு மேல் மற்றும் வாயிற்கு பக்கத்தில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. உடனே அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்-க்கு போன் செய்து வரவழைத்து அபிமணியை கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமணையிலும் பிரதீபாவை கரூர் அமராவதி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். நாங்கள் பின்னிட்டு மேற்படி அரசு மருத்துமனையில் பார்த்தபோது அபிமணியை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் இறந்து விட்டதாக கூறியதன் பேரில் அபிமணியின் அப்பாவிற்கு எனது தம்பி ராஜ்குமார் தகவல் கூறினார்கள். மறுநாள் கரூர் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி தான் மேலே சொன்ன அரசு பேருந்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இறந்து போன அபிமணி என்னுடைய உடன் பிறந்த சகோதரரின் மகன் ஆவார். சம்பவ சமயத்தில் நாங்கள் சென்ற TN 47 2858 HONDA SPLENDER PLUS இருசக்கர வாகனம் என்னுடைய தம்பி ராஜ்குமாரின் வாகனம். மேற்படி வாகனத்தின் TN 47 க்கு பின் குறிப்பிடப்பட்டிற்கும் ஆங்கில எழுத்துக்கள் ஞாபகமில்லை. மேற்படி வாகனத்தை எனது சகோதரர் சுமார் 4 வருடமாக வைத்திருந்தார். நாங்கள் சென்ற புளியூர் ரோடு போக்குவரத்து அதிகமான பகுதி

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு முன்னால் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்ததற்கு பின்னிட்டு கும்பல் கூடிவிட்டது என்றால் சரிதான். போலீசார் அங்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ரோட்டின் விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் தெருவிளக்குகள் இல்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்தில் பயணிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை எனது தம்பி ராஜ்குமார் ஓட்டி வந்தார். எனக்கு விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்துக்கும் சுமார் 30 மீட்டர் தூரம் இருந்தது. சாட்சி பின்னிட்டு 30 அடி என்று கூறினார். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் அரசு பேருந்திற்கு முன்னால் விபத்து ஏற்பட்டதால் விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் எனது அண்ணன் குமார் புகார் கொடுத்தார். புகார் கொடுக்கும் போது நான் உடன் செல்லவில்லை. எனது அண்ணன் மருத்துவமனைக்கு அதிகாலை 03.00 மணியளவில் வந்தார். அன்றைய தினம் போலீசார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. மறுநாள் என்னை விசாரித்தார்கள். ஆம்புலன்ஸ்சில் நான் எனது உடன் பிறந்த அண்ணன் மகன் அபிமணியுடன் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் விபத்தில் காயம்பட்ட எனது உடன் பிறந்த அண்ணன் மகன் அபிமணியை மருத்துவமனையில் சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன எனது உடன் பிறந்த அண்ணன் மகன் அபிமணிக்கு இழப்பீடு வழங்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Page No.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.584/2024

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-4<br>Defence<br>Court |
| Name | : | தங்கராஜ் |
| Father's Name | : | குழந்தைவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 28.08.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் பஞ்சப்பட்டியில் குடியிருந்து பிட்டராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். விபத்தில் இறந்து போன அபிமணி என்னுடைய பேரன் ஆவரர். கடந்த 19.07.2021ம் தேதி எனது பேரனும் சுக்காம்பட்டியை சேர்ந்த பிரதீபாவும் எனது பேரனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் புளியூர் – உப்பிடமங்கலம் ரோட்டில் வடக்கு இருந்து தெற்கு நோக்கி உப்பிடமங்கலம் மேம்பாலம் அருகே

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

சென்றபோது அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து வேகமாக வந்து எனது பேரன் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியது என்றும், மேற்படி விபத்தில் எனது பேரனுக்கு வயிற்றிலும் வலது கையில் பலத்த காயமும், பிரதீபாவிற்கு வலது கண்ணுக்கு மேல் மற்றும் வாயில் ரத்த காயமும் ஏற்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக கரூர் GH க்கு அழைத்து சென்று காண்பித்தபோது அபிமணி இறந்து விட்டதாக சொல்லி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருப்பதாகவும் பிரதீபா அமராவதி மருத்துவமனையில் சேர்த்து இருந்திருப்பதாகவும் தகவல் கேள்வி பட்டேன். பின்னர் கரூர் அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கு முன்பாக அங்கு வந்த போலீசார் அபிமணி பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.